இதை ஒரு சாதாரண பிரச்சினையாக இந்த அரசு கருதாது என்ற உறுதியை நான் உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தினால் அனுமதி மறுக்கப்படுகிறது.

4. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(அ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்), திருத்த சட்ட முன் வடிவு, 1979

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இதை நான் எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஆ) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனப்) திருத்த சட்டமுன் வடிவு, 1979

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்த சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இதை நான் எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS